සියලුම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

# மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## ஆண்டிறுதிக் கணிப்பீடு - 2012

## தரம் - 11

## கிறிஸ்தவம் - I

## (Christianity - I)

0286

சுட்டெண்: .................................................

நேரம் - 1 மணித்தியாலம்

கவனிக்க:

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1). (2). (3). (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

---

(01) யூத ஆண்குழந்தைகளை விருத்தசேதனம் செய்யவதனால் எதிர்பார்க்கப்படுவது
i. பரம்பரை உரிமைகளைப் பேணுதல்
ii. குழந்தைக்கு அர்த்தமுள்ள பெயரிடுதல்
iii. இறையுறவை ஏற்படுத்துதல்
iv. குருத்துவத்திற்கு குழந்தையை ஏற்றல்

(02) "யோவான்" எனும் பெயரின் பொருள்
i. சிரித்தல்
ii. வானந்தரத்தில் வாழ்பவர்
iii. பணியின் இறைவாக்கினர்
iv. இறைவனின் கொடை

(03) கிறிஸ்து பிறப்பை கொண்டாடும் போது நாம்
i. நன்றியோடு எம்முள்ளங்கள் இறைவனை நெருங்க வேண்டும்
ii. ஏழைகளுக்கு விசேட அழைப்பிட வேண்டும்
iii. சென்ற வருடத்தை விட நன்றாகக் கொண்டாட வேண்டும்
iv. விழாக்கோலத்துடன் ஆடம்பரமாக கொண்டாடி பிறரை மகிழ்விக்க வேண்டும்

(04) உண்மையான மனமாற்றத்தின் முதற்படிநிலையை அறிய முடிவது
i. இறைவனிடம் பாவங்களை கூறல்
ii. நீரில் மூழ்கி திருமுழுக்குப் பெறல்
iii. குருவானவரிடம் பாவங்களை கூறல்
iv. தம்பாவ நிலையை ஏற்றுக்கொள்ளல்

(05) கீழ்வரும் கூற்றுக்களில் இயேசுவின் பன்னிரு சீடர்களுக்குரிய கூற்றாக அமைவது
i. அவர்களில் பெரும்பாலானோர் திருமுழுக்கு யோவானின் சீடர்களாவர்
ii. அவர்கள் வெவ்வேறு தொழில்கள், வாழ்க்கைப் பின்னணியிலிருந்து வந்தவர்கள்
iii. அவர்கள் இஸ்ரயேலின் பன்னிரு கோத்திரங்களின் தலைவர்களாவர்
iv. அவர்கள் ஜெருசலேமில் தங்கள் குடும்பங்களுடன் வாழ்ந்தவர்கள்

(06) இயேசு எதிர்கொண்ட முதல் சோதனையாவது
i. உலகியல் செயற்பாடுகளினால் மனிதர்களை தம்வசப்படுத்தல்
ii. இறைமகன் எனும் நிலையை சந்தேகப்படுதல் தொடர்பானது
iii. உள மற்றும் ஆன்மீகத் தேவைகளை பூர்த்தி செய்தல் தொடர்பானது
iv. உலகப் புகழ், செல்வங்கள் என்பவற்றை வணங்குதல் தொடர்பானது

(07) திருத்தூதர் 72 பேரைப் போன்று நாமும் எம் வாழ்வில் பெறும் அனுபவமாவது
i. தேவ அழைத்தலிற்கு பதிலளிக்கும் போது இறைவனே எம்தேவைகளை நிறைவு செய்வார்
ii. அனைவரது வரவேற்புக்கு பாத்திரமாதல்
iii. தொழில் ரீதியான பயிற்சியைப் பெறுதல்
iv. விண்ணரசின் செய்திகளை செயல்களாளன்று வார்த்தைகளால் வெளிப்படுத்தல்

(08) "பிறர் உங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென விரும்புகிறீர்களா"?
i. நீங்களும் கருணையுள்ளவராய் இருங்கள்
ii. நீங்களும் அதையே செய்யுங்கள்
iii. நீங்கள் அவர்களுக்கு சவாலாயிருங்கள்
iv. இறைவனிடம் வேண்டுங்கள்

(09) விண்ணரசை முன்னெடுக்கும் பணிக்கு அழைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவர்கள்
i. விண்ணரசைப் பற்றி நன்றாக கற்க வேண்டும்
ii. பலவீனமானவர்களில் பலமானவர்களை அதற்கென தெரிவு செய்தல்
iii. இறை உதவியுடன் அப்பணியின் பொறுப்புகளை நிறைவேற்றல்
iv. தமக்கு சவால்விடுபவர்களை எந்நேரமும் வெற்றி கொள்ளல்

(10) இயேசுவின் போதனைகளின்படி குழந்தைகளிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டிய முக்கிய பண்பு,
i. இரக்கம்    ii. நேர்மை    iii. மன்னிப்பு    iv. பொறுமை

(11) துன்புறும் ஊழியன் மூலமாக தற்கால கிறிஸ்தவர்களுக்கு விடுக்கப்படும் செய்தியாக அமைவது,
i. துன்பப்படுவோருக்கு இறைவார்த்தை ஏடுகளை வழங்குதல்
ii. இயன்றளவு செல்வத்தைச் சேர்த்தல்
iii. எந்நேரமும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு சமத்துவத்துடன் வாழுதல்
iv. துன்பத்தை தாங்கிக்கொண்டு அநீதிக்கு முன் அமைதியாயிருத்தல்

(12) இறையரசின் பண்புகள் தொடர்பாக, அதன் உறுப்பினர்களுக்குரிய முக்கிய பொறுப்பாக அமைவது
i. அப்பண்புகளை பிறரிடம் ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துதல்
ii. அப்பண்புகளை பரம்பரை பரம்பரையாகப் பேணிப் பாதுகாத்தல்
iii. அப்பண்புகளினூடாக மனித சமுதாயத்தை மாற்றியமைத்தல்
iv. அப்பண்புகளை வாழ்வில் பின்பற்றி உண்மைக் கிறிஸ்தவனாக வாழுதல்

(13) சதுசேயரின் வினாவிற்கு இயேசு மறுவினா எழுப்பியது
i. சீசருக்கு வரிசெலுத்துதல்
ii. உயிர்ப்பு தொடர்பான வினாவின் போது
iii. சிலுவையில் அறைதல் தொடர்பான வினாவின் போது
iv. ஆட்சி அதிகாரம் தொடர்பான வினாவின் போது

(14) தர்சு நகர பரிசேயரான சவுல் எனப்பட்ட பவுல், புறவினத்தவர்களின் அப்போஸ்தலனாக, அழைக்கப்பட முக்கிய காரணியாக அமைவது
i. அகிரிப்பா பர்னிஸ் முன்னிலையில் ஆற்றிய உரை
ii. லிதியா மற்றும் சிறைக்காவலர் திருமுழுக்குப் பெறல்
iii. ஆக்கிலா பிரிஸ்கிலா ஆகியோருடன் போதகப்பணி
iv. பர்னபா மற்றும் மாற்கு ஆகியோருடன் மறைதூதுப் பயணம் செல்லல்

(15) கிறிஸ்தவ குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை நல்ல முறையில் எதிர்கொள்ள
i. குடும்ப உறுப்பினர்களிடையே நற்புரிந்துணர்வும் அன்பும் வேண்டும்
ii. வெகுஜன ஊடகங்களை பிள்ளைகளுக்கு பார்க்க இடமளித்தல்
iii. சமுதாயப் பிரச்சினைகள், இன்னல்களுக்கெதிராக குரல்கொடுத்தல்
iv. கடினமாக உழைத்து இயன்றளவு பணம் சேர்த்தல்

(16) சிரேனூர் சீமோன், அரிமத்தியா யோசப் ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நற்பண்பாக அமைவது.
i. எந்நேரமும் சமுதாயத்தில் விசேட இடம் வகித்தல்
ii. அமைதியான, நிம்மதியான வாழ்க்கை வாழுதல்
iii. இயேசுவை பின் சென்று வாழ்தல்
iv. எப்போதும் வெற்றியுடன் செயற்படுதல்

(17) கிறிஸ்தவ மாணவர் என்ற ரீதியில் துன்பப்படுவோருக்காகச் செய்யக்கூடிய சிறு செயலாக அமைவது.
i. அம்மக்களை தாம் பின்பற்றும் சபையில் சேர்த்தல்
ii. அவர்களுக்க நன்மை பயக்கும் விதத்தில் சட்டதிட்டங்களை உருவாக்குதல்
iii. அம்மக்களுக்கு கடனுதவிகளை அளித்தல்
iv. அம்மக்களுக்காக இறைவனிடம் செபித்தலும், இறை வார்த்தைகளினால் அவர்களைத் திடப்படுத்தலும்

(18) "கிரேக்க நூல்கள், சடங்கு சம்பிரதாய முறைகள் மற்றும் மறை விசுவாசம் பற்றியும் பவுலிற்கு இளவயதிலேயே போதிய அறிவு இருந்தது" இதனூடாக வெளிப்படுத்தப்படும் செய்தியாக அமைவது.
i. பவுல் யூதரானாலும் கிரேக்கருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்
ii. பவுலின் மறைபணிக்கு அவரது கடந்தகால வாழ்வு பேருதவியாயிருந்தது
iii. பிற மத விசுவாசத்தை கட்டியெழுப்ப பவுலடியார் உதவினார்
iv. பவுலின் அறிவுத்தாகமும், அதனைப் பெறுவதற்கான ஆர்வமும்

(19) திருச்சட்ட அறிஞர் தொடர்பான மாணவனொருவனின் கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.


| | |
|---|---|
| திருச்சட்ட அறிஞர் | A - சுமக்க முடியாத சுமைகளை மக்களிற்கு அளித்தல்<br>B - உயிர்ப்பை மறுதலித்தல்<br>C - இறைவாக்கினருக்கு கல்லறை அமைத்தல்<br>D - எழுத்துருவான சட்டங்களை மட்டும் ஏற்றல் |

இவற்றுள் சரியானவிடை
i. A , B　　ii. B, C　　iii. C, A　　iv. D, C

(20) தொடக்க திருச்சபையினால் நாம் பெறும் நற்பண்புகளாவன,
i. ஒற்றுமை, இரக்கம், பொறுமை
ii. மன்னிப்பு, ஒற்றுமை, நேர்மை
iii. பொறுமை, மன்னிப்பு, நேர்மை
iv. ஒற்றுமை, நேர்மை, இரக்கம்

(21) மன்னிப்பு தொடர்பாக கிறிஸ்தவருக்கு கொடுக்கப்படும் நிபந்தனையாவது,
i. மன்னிப்பு குறிப்பிட்ட தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்
ii. எமக்கு குற்றம் புரிந்தவர்களை முழுமனதுடன் மன்னிக்க வேண்டும்
iii. எம்மிடம்கடன் பெற்றவர்களின்கடனை முழுமையாக தள்ளுபடி செய்தல்
iv. பாவ சந்தர்ப்பங்களில் நின்றும் விலகி நடக்க வேண்டும்

(22) இயேசு பரிசேயரிற்கு வெளிப்படுத்த விழைந்த செய்தியாவது
i. திருச்சட்டத்தை விடவும் மனிதாபிபமானத்திற்கான அர்பணிப்பே அவசியம்
ii. பிறரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய தலைமைத்துவப்பண்புகள்
iii. தமது நற்பண்புள்ள வாழ்வை பிறர் அறியும் படியாக வாழவேண்டும்
iv. எந்நேரமும் விவாதங்களினூடாக பிறரை வெற்றிகொள்வதன் அவசியம்

(23) 


மேல்வரும் கூட்டிற்கு மிகப் பொருத்தமான விடையாக அமைவது
i. மனித சமுதாய வளர்ச்சி
ii. தேசிய வாதத்தை ஏற்படுத்தல்
iii. பரம்பரை உரிமைகளைப் பேணல்
iv. இவ்வுலகில் இறையரசை ஏற்படுத்தல்

(24) ஊதாரி மைந்தனின் உவமையினூடாக, வகுப்பிலுள்ள வழி தவறிய உமது நண்பனுக்கு
i. வகுப்பாசிரியரினூடாக அறிவுரைகூறல்
ii. பகிரங்கமாக தவறுகளை சுட்டிக் காட்டுதல்
iii. அவனுக்கு இறையன்பை உணர உதவுதல்
iv. உரிய தண்டனையை வழங்குதல்

(25) இறையரசின் வளர்ச்சிக்காக நாம்,
i. மக்களின் உதவியை வேண்டல்
ii. சபைகளில் நிவாரணம் வழங்குதல்
iii. விசேட திட்டங்களை அறிமுகப்படுத்தல்
iv. இறைவழியில் வாழ்ந்து பிறரை இறை வழியில் வாழ வைத்தல்

(26) துன்பப்படுவோர் தொடர்பான இயேசுவின் முன்மாதிரிகையை பின்பற்றும் நாம் செய்ய வேண்டியது
i. பிச்சைக்காரர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்
ii. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோர், கைவிடப்பட்டோருக்கு உதவிசெய்தல்
iii. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை வேலைக்கமர்த்துதல்
iv. தேவையில் உழல்வோருக்கான நிதித் திட்டமொன்றை உருவாக்குதல்

(27) வாழ்வினை நல்ல முறையில் வாழ்வதற்கு இளைஞர்களால் செய்யப்படவேண்டிய செயற்பாடாக அமைவது
i. தமது உடல் வளர்ச்சியில் அக்கறை கொள்ளல்
ii. தமது நற்பெயரை காத்துக் கொள்ளும் வண்ணம் செயற்படுதல்
iii. உடலின் நடத்தைகளில் தூயாவியின் இருப்பை உணர்ந்து தூய்மையை கடைபிடித்தல்
iv. நன்றாகக் கல்வி கற்று நற்தொழிலொன்றை பெற்றுக்கொள்ளல்

(28) தோற்றும் மாறிய நிகழ்வினூடாக

A - திருச்சட்டமும் இறைவாக்குகளும் நிறைவு பெற்றன
B - இயேசு மனிதத்தன்மை வெளிப்பட்டது
C - மூவொரு இறைவனின் வெளிப்பாடு நடைபெற்றது
D - சீடர்களுக்கு இயேசுவை பற்றிய புரிந்துணர்வு ஏற்பட்டது

பின்வருவனவற்றுள் சரியான விடைத் தொகுதியாக அமைவது,
i. A, B ii. B, C iii. C, D iv. D, A

(29) "புதிய வாழ்வு" என்பதனால் கருதப்படுவது
- i. பாவவிடுதலை பெற்ற இறைமனித உறவு
- ii. உலகியல் சுகபோக வாழ்நிலை
- iii. புதிதாக தொடங்கப்பட்ட குடும்ப வாழ்வு
- iv. திருச்சபைகளின் ஒற்றுமை

(30) தேவாலயத்தின் திரை இரண்டாகக் கிழிந்ததனால் அடையாளப்படுத்தப்படுவது
- i. தீய செயல்களைச் செய்வதனால் ஏற்படும் பாவநிலை
- ii. தேவாலயத்தின் செயற்பாடுகள் சரியான முறையில் நடைபெறாமை
- iii. தேவாலயத் திரையின் வரலாற்று முக்கியத்துவமும், அதன் மகிமையும்
- iv. இயேசுவின் மரணத்தில் பெறப்பட்ட முழுமனித குல மீட்பு

(31) எமது வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் ஜுபிலி ஆண்டுகளின்போது
- i. எமது வீடுகளிலுள்ள பணியாளர்களுக்கு முழு விடுதலை அளித்தல் வேண்டும்
- ii. எமது வாழ்வின் அடிமைக்கட்டுகளின்று விடுபட்டு மகிழ்ச்சியடைதல் வேண்டும்
- iii. சட்டதிட்டங்களுக்கு ஏற்ப மத வழிபாடுகளை நடாத்துதல் வேண்டும்
- iv. எமது சொத்துக்களை விற்று முதல் உரிமையாளரிடம் ஒப்படைக்கவேண்டும்

(32)


| நோக்கம் (i) | அனுபவம் (ii) | நிகழ்கால உலகினுள் (iii) |
|---|---|---|
| இறையரசை வரவேற்றல் | மறுவாழ்வு | A - தமது சபையினின்று வேறு சபையின் அங்கத்தவராதல்<br>B - வனாந்திரத்தில் அமைதியாக வாழல்<br>C - கிறிஸ்தவ படிப்பினைகளின் படி வாழ்வை மாற்றியமைத்தலில்<br>D - இரண்டாம் முறை திருமுழுக்குப் பெற்று சேவையாற்ற செல்லல் |

பின்வருவனவற்றுள் (iii) இற்கு மிகப் பொருத்தமான விடைகளாய் அமைவது

i. A    ii. B    iii. C    iv. D

(33) பவுலடியார் குறிப்பிடும் அன்பின் பண்புகள் அடங்குவது
- i. பிலிப்பியரின் திருமுகத்தில்
- ii. எபேசியருக்கெழுதிய திருமுகத்தில்
- iii. உரோமையருக்கெழுதிய திருமுகத்தில்
- iv. கொரிந்தியருக்கெழுதிய திருமுகத்தில்

(34) உங்கள் உடலின் ஒளி உங்கள் கண்ணாகும்



A - தூய ஆவியின் அருளை கொண்டிருத்தல்
B - தூயாவியினால் ஒளி பெறல்
C - தூயாவியின் ஒளியை விசுவதித்தல்
D - தூயாவியானவரின் அருளொளியை வாழ்வில் செயற்படுத்தல்

இவற்றில் கூட்டிற்கு மிகப் பொருத்தமான கூற்றுக்களாவன

i. A, B    ii. B, D    iii. C, A    iv. D, C

(35) தேவாலயத்தை தூய்மைப்படுத்திய சம்பவத்தின் மூலமாக இன்றைய கிறிஸ்தவர்களுக்கு விடுக்கப்படும் சவாலாக அமைவது.
- i. தேவாலயம் கிறிஸ்தவரனைவருக்கும் தேவ ஆராதனை செபம் என்பவற்றிற்கு பயன்படுத்தப்படல்
- ii. தேவாலயத்திற்கென நிதிதிரட்டுவதற்கு ஆலயத்திற்கு வெளியே செயற்பட வேண்டியிருத்தல்
- iii. ஆலயங்களனைத்து திறந்த நிலையில் வைக்க வேண்டியிருத்தல்
- iv. ஆலய சட்டதிட்டங்களை மாற்றியமைக்க வேண்டி ஏற்படல்

(36)

| உவமைகள் | படிப்பினைகள் |
|---|---|
| i) காய்க்காத அத்திமரம் | A - விண்ணரசின் பணிக்கான தீர்மானத்தில் உறுதி |
| ii) ஒடுக்கமான வாயில் | B - சமுதாய யதார்த்தத்தை புரிந்து வாழுதல் |
| iii) இடைக்கச்சைகட்டிவிளக் கேற்றுதல் | C - மனமாற்றின் பலனை அனுபலித்தல் |
| iv) காலநிலை மாற்றங்களை கண்டுணர்தல் | D - கடினமானாலும் நல் வழியில் வாழுதல் |

இவற்றை இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடை,

i. A, B, C, D
ii. B, C, A, D
iii. C, D, A, B
iv. D, A, C, B

(37) பரலோக மந்திரச் செபத்தின் முக்கிய அம்சமாய் அமைவது

i. எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு அளித்தருளும்
ii. எங்களை சோதனையில் விழ விடாதேயும், தீமையினின்று இரட்சித்தருளும்
iii. உமது இராட்சியம் வருக உமது சித்தம் நிறைவேறுக
iv. எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்

(38) தமது சுய விருப்பத்துடன் ஏழ்மை நிலையில் வாழ்ந்து, இவ்வுலகில் கிறிஸ்துவின் அன்பை எடுத்துக் காட்டியவர்

i. டெஸ்மன்ட் டுடு
ii. 2ம் எலிசபெத் மகாராணியார்
iii. அன்னை தெரேசா
iv. ஆபிரகாம் இலிங்கன்

(39) இயேசுவிற்கும் கிரேக்கருக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலின் அடிப்படையில் கீழ்வரும் அட்டவணை தரப்பட்டுள்ளது

| எதிர்பார்ப்பு | செயற்பாடு | மறுமொழியளித்தல் |
|---|---|---|
| கிறிஸ்துவைப் பின்செல்லல் | பணியும், பலன் தரலும் | A - மாற்றங்களைக் கற்றல்<br>B - உலகிற்கு வெளிப்படுத்தல்<br>C - தமக்குரிய முறையைப் பின்பற்றல்<br>D - பூரண பரித்தியாகம் |

இவற்றுள் கிறிஸ்தவர்களிற்கு மிகப் பொருத்தமான தொகுதியாக அமைவது

i. A
ii. C
iii. B
iv. D

(40) கிறிஸ்தவர்களுக்கு உரித்தாகும் அழிவுறாத எதிர்ப்பாய் அமைவது

i. எமது எதிரிகளுக்கு நிச்சயமாக என்றாவது தண்டனை கிடைக்கும்
ii. விண்ணரசின் பண்புகளை கடைப்பிடித்து வாழ்வதனால் நிலைவாழ்வில் நுழைய முடியும்
iii. வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் இயற்கை அனர்த்தங்களிற்கு முகங்கொடுக்க வேண்டியேற்படாது
iv. உலகியல் செல்வங்களினூடாக இறைவனைக் கண்டுணர வழியேற்படும்

(1 x 40 = 40புள்ளிகள்)

සියලුම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

# மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## ஆண்டிறுதிக் கணிப்பீடு - 2012

### தரம் - 11

### கிறிஸ்தவம் - II

### (Christianity - II)

0289

நேரம் - 2 மணித்தியாலம்

- முதலாம் கட்டாய வினா உட்பட, ஏனைய வினாக்களிலிருந்து விரும்பிய 04 வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக 05 வினாக்களிற்கு விடை எழுதுங்கள்.

(1) கட்டாய வினா

i) கிறிஸ்துவின் இவ்வுலக பணி வாழ்வின் இறைவார்த்தைகள் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பமாக அமைவது யாது?

ii) கீழ்வரும் விவிலிய வார்த்தையைப் பூரணப்படுத்துக.

ஏழைகளின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில்.............................................

iii) விண்ணரசின் சட்டங்களாக இயேசு அறிமுகப்படுத்திய போதனை எது?

iv) தலைவன், பணியாளரிடம் இருக்கவேண்டிய பண்புகள் 02 தருக.

v) அ) புதிய ஏற்பாட்டின் மையமாகக் கருதப்படுவது எது?

ஆ) அதனூடாக நாம் விசுவாசிக்க வேண்டிய வேதசத்தியம் என்ன?

vi) கீழ்வரும் கூட்டில் சரியான விடையை எழுதிப் பூரணப்படுத்துக.

யூதரின் எதிர்பார்ப்பு ⟶ அரசியல் விடுதலை

மெசியாவின் வருகையின் எதிர்பார்ப்பு ⟶ [ ]

vii) பவுலடியார் 02ம் மறைதூதுப் பயணத்தில் எதிர்கொண்ட சவால்கள் 02 எழுதுக.

viii) அ) தற்கால உலகில் நடைபெறும் இயற்கை அனர்த்தங்கள் 02 தருக.

ஆ) இயற்கை அனர்த்தங்களின்போது கிறிஸ்தவர்களால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் 02 தருக.

ix) யூத சமுதாயத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய நற்பண்புகள் 02 எழுதுக.

x) "உண்மையான திராட்சைக்கொடி" எனும் உருவகத்தின் மூலமாக இயேசு எமக்கு வெளிப்படுத்தும் படிப்பினை என்ன? (2 x 10 = 20 புள்ளிகள்)

(2) "என் தந்தையின் வீட்டில் நான் இருக்க வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதா?

i. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது

ii. இக்கூற்றைக் கூறியவர், தம்மைப் பற்றி நன்குணர்ந்து கொண்ட விடயங்கள் எவை?

iii. கிறிஸ்தவ இளைஞர் ஒன்றுகூடலின்போது அவர்களை திடப்படுத்துவதற்கான, பொருத்தமான கையேடு ஒன்றினை தயாரிக்குக. (2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

3. "இவரும் ஆபிரகாமின் மகனே"

i. இங்கு "இவர்" என்ற சொல்லினூடாக இயேசு யாரைக் குறிப்பிடுகின்றார்?

ii. இயேசுவை கண்ணுற்றதால் அவருடைய வாழ்வில் மாற்றம் ஏற்பட்டதற்கான காரணங்கள் 02 எழுதுக.

iii. தமது பாவத்தினால் இயேசுகிறிஸ்துவினுள் மீட்பு கிடைக்காது என்ற மனநிலையில் வாழும் உமது நண்பர் ஒருவரை, தைரியப்படுத்தும் வகையில் சிறு கடிதமொன்றினை எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

4. இதை என் நினைவாகச் செய்யுங்கள்

i. இவ்வாக்கியம் குறிப்பிடும் அருளடையாளம் எது?

ii. இதன் மூலம் வெளிப்படும் நற்பண்புகள் 03 எழுதுக?

iii. மேற்படி நற்பண்புகளுக்கு கிறிஸ்தவராகிய உமது வாழ்வினூடாக நீர் அளிக்கும் பதில் என்ன?

5. "ஆண்டவர் என் ஆயன், எனக்கேதும் குறையில்லை"

i. பழைய சமுதாயத்தில் ஆயனுக்கு வழங்கப்பட்ட பணிகள் 02 எழுதுக.

ii. கிறிஸ்துவின் இவ்வுலக பணிவாழ்வினூடாக, மேய்ப்புப்பணியை ஆற்றிய சந்தர்ப்பங்கள் 03 ஐ முன்வைக்குக.

iii. உமது பாடசாலை சமுதாயத்தினுள் நீரும் ஆயனாய் செயற்படக்கூடிய முறைகளை உதாரணங்களுடன் எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

6. ஒற்றுமையுடன் கூடிய தலைத்துவத்தினூடாக நிறைவான மறைபணியின் அடித்தளம் அமையவேண்டும்

i. பவுல் மற்றும் பர்னபா ஆகியோருக்கிடையில்

ii. கூட்டுறவுடன் கூடிய தலைமைத்துவத்தின் போது பவுல் மற்றும் பர்னபா ஆகியோருக்கு எதிர்கொள்ளநேரிட்ட சவால் ஒன்றினை விளக்குக

iii. உமது பாடசாலையில் சிறந்த முறையில் கூட்டுறவுடன் கூடிய தலைமைத்துவத்தை செயற்படுத்தக்கூடிய வழிமுறைகளை குறிப்பிடுக

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

7. "ஓநாய் மந்தைகளோடு வாசம் செய்யும் குருளையோடு ஆடுகள் வாழும்"

i. "சாலோம்" "அயிரேனியா" என்பவற்றின் பொருளை எழுதுக

ii. பல்லின சமுதாயத்தில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தல் தொடர்பான இயேசுவின் படிப்பினைகளை எழுதுக.

iii. நீர் வாழும் சமூகத்தில் சமாதானத்தை உருவாக்க கிறிஸ்தவன் என்ற ரீதியில் செய்யக்கூடிய செயற்பாடுகளைக் குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)